# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5010, 2363 5011   நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in   இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 15/2020** **நாள்: 04.03.2020**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 11.01.2020 மற்றும் 30.01.2020-ல் நடைபெற்ற சாதாரண மறைமுகத் தேர்தல்களின்போது பல்வேறு காரணங்களுக்காக ஒத்தி வைக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி தலைவர் மற்றும் துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் மற்றும் கிராம ஊராட்சி துணைத் தலைவர் பதவியிடங்களுக்கான மறைமுகத் தேர்தல்களை 04.03.2020-ல் நடத்திட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது.

அதன்படி, மறைமுகத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்த ஒரு மாவட்ட ஊராட்சித் தலைவர் பதவியிடம் மற்றும் ஒரு மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் பதவியிடத்திற்கான தேர்தல்கள் போதிய எண்ணிக்கையில் உறுப்பினர்கள் வருகை தராத காரணத்தால் மறைமுகத் தேர்தல் நடைபெறவில்லை.

மேலும், மறைமுகத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்த 11 ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கான பதவியிடங்களில் போதிய எண்ணிக்கையில் உறுப்பினர்கள் வருகை தராத காரணத்தால் 3 பதவியிடங்களுக்கும், சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்னை காரணமாக 2 பதவியிடங்களுக்கும் மறைமுகத் தேர்தல் நடைபெறவில்லை. மீதமுள்ள 6 பதவியிடங்களுக்கு மறைமுகத் தேர்தல் நடைபெற்றது. இதில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 5 இடங்களிலும், திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு இடத்திலும் வெற்றி பெற்றுள்ளது.

மறைமுகத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்த 18 ஊராட்சி ஒன்றியக் குழுத் துணைத் தலைவர்களுக்கான பதவியிடங்களில் போதிய எண்ணிக்கையில் உறுப்பினர்கள் வருகை தராத காரணத்தால் 11 பதவியிடங்களுக்கும் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்னை காரணமாக 2 பதவியிடங்களுக்கும் மறைமுகத் தேர்தல் நடைபெறவில்லை. மீதமுள்ள 5 பதவியிடங்களுக்கு மறைமுகத் தேர்தல் நடைபெற்றது. இதில் திராவிட முன்னேற்றக் கழகம் 2 இடங்களிலும், இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு இடத்திலும், பாட்டாளி மக்கள் கட்சி ஒரு இடத்திலும் வெற்றி பெற்றுள்ளது. சுயேட்சை வேட்பாளர் ஒரு இடத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

மறைமுகத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்த 71 கிராம ஊராட்சி துணைத் தலைவர்களுக்கான பதவியிடங்களில் போதிய எண்ணிக்கையில் உறுப்பினர்கள் வருகை தராத காரணத்தால் 30 பதவியிடங்களுக்கும் போட்டியிடும் வேட்பாளருக்கு முன்மொழிபவர் இல்லாததால் ஒரு பதவியிடத்திற்கும் மறைமுகத் தேர்தல் நடைபெறவில்லை. மீதமுள்ள 40 பதவியிடங்களுக்கு மறைமுகத் தேர்தல் நடைபெற்று கிராம ஊராட்சி துணைத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

4/3/2020

மக்கள் தொடர்பு அலுவலர்